4. அறிவிப்பு

பேரவைச் செய்தியாளர்கள் மாடம் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்களுக்குப் பேனா மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தியாளர்கள் மாடம் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணைப்படி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுவதுபோன்று, இந்த ஆண்டும் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமன்ற பேரவைச் செயலக சட்டமுன்வடிவுப் பிரிவு–2–லிருந்து இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.*

3. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், அவ்வளவுதான் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், நீங்கள் அரை மணி நேரத்திற்குமேல் பேசியிருக்கிறீர்கள். இப்படி நீங்கள் செய்வது கொஞ்சம்கூட முறையல்ல. உரையை முடியுங்கள் என்று சொன்னால் நீங்கள் பேசிக்கொண்டேயிருந்தால் எப்படி? திரு. க. தினகரன், நன்றி சொல்லி உட்காருங்கள்.*

திரு. க. தினகரன்: *மேலும், ஆண்டுதோறும் முஸ்லிம் இன மக்கள் ஹஜ் பயணம் சென்று வர குலுக்கல் முறையிலே ஏற்பாடு செய்து வருகின்றது. கடந்த வருடம் 3,620 பேரும், இந்த ஆண்டு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இல்லையென்றால் நான் வேறு உறுப்பினரைக் கூப்பிட*